

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் நடைபெற்ற திமுக பவள விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு 1000க்கும் மேற்பட்டோருக்கு நலஉதவிகள் வழங்கி, சிறப்புரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்பி., இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், பொன்.முத்து, ப.கார்த்திவேல்மாறன், சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலீப்குமார், எழில்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரியில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மீது தேர்தல் ஆணையம் வழக்கு!

திருப்பத்தூர், நவ. 15 -

2021 சட்டமன்றத் தேர்தலில் பொய்யான பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மீது தேர்தல் ஆணையம் சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

2021 சட்டமன்றத் தேர்தலில் ஜோலார்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி பொய்யான பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததாக ராமமூர்த்தி என்பவர் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்திருந்தார்.

இந்த புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டாததால், கே.சி.வீரமணி மீதான நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றத்தில் ராமமூர்த்தி மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், கே.சி.வீரமணி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து விசாரணை நடத்திய தேர்தல் அதிகாரிகள், கே.சி.வீரமணியின் பிரமாணப் பத்திரத்தில் சொத்துக்கள் மறைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கே.சி.வீரமணி பொய்யான பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததாக திருப்பத்தூர் நீதி மன்றத்தில் தேர்தல் அலுவலர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மக்கள் பிரதி நிதித்துவச் சட்டம் 125 ஏ பிரிவின் கீழ் நாட்டிலேயே முதன்முறையாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது.

# வியாசர்பாடி ஜீவா ரெயில் நிலையத்தை சீர் செய்து தாரீர்!

## ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு – கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, நவ.15-

வியாசர்பாடி ஜீவா இரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் தேங்கியிருக்கும் கழிவு நீரை அகற்றி, சாலைகள் அமைத்து மின்சார விளக்குகள் பொருத்தி சீர் செய்து தரும்படி வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

வியாசர்பாடி ஜீவா இரயில் நிலையம் அருகே வசிக்கும் பொதுமக்களும், தினசரி பணி நிமித்தமாக அந்த இரயில்வே நிலையத்தைப் பயன்படுத்தும் பயணிகளும் என்னிடம் வழங்கியுள்ள மனுவில் தெரிவித்துள்ள கோரிக்கைகளை, தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன். அம்மனுவில் அவர்கள் அந்த இரயில்வே நிலையத்தின் அருகே அமைந்துள்ள பொலேரியம்மன் கோயிலில் இருந்து இரயில் நிலையம் வரை அமைந்துள்ள நடைபாதை முழுவதும் சாக்கடை நீர் தேங்கி உள்ளது . இதனால் இரயில் பயணிகள் சிரமம் அடைவதுடன் சுகாதார சீர்கேடுக்கு ஆளாகின்றனர். மேலும் பருவ மழைக் காலங்களில் இன்னும் மோசமான நிலைமையை பயணிகள் எதிர்கொள்ளும் சூழல் ஏற்படுகிறது. எனவே, உடனடியாக இப்பகுதியைச் சீரமைத்துதரக்கோருகின்றனர்.

மேலும் இரயில் நிலையம் சுற்றியுள்ள பகுதிகள் பெரும்பாலும் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் பயணிகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படுகிறது எனவே, உடனடியாக இப்பகுதியில் தெரு விளக்குகளை இரயில்வே நிர்வாகம் பொருத்தித் தரும்படி கோருகின்றனர்;

மேலும், வியாசர்பாடி ஜீவா இரயில் நிலையம் சுற்றியுள்ள இரயில்வே துறைக்கு சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், மிகவும் பழுதடைந்து ,குண்டும் குழியுமாக உள்ளன. இரயில்வேயினால் துறைக்கு சொந்தமான இச்சாலைகளைச் சீரமைத்து, கான்கிரீட் சாலை அமைத்து தரும்படி அப்பகுதி பொதுமக்களும், இரயில் பயணிகளும் கோரிக்கைவிடுத்துள்ளனர்,

எனவே, இரயில்வே துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக வியாசர்பாடி ஜீவா இரயில் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில், மேலே கூறியுள்ள குறைகளை நிவர்த்தி செய்து, அப்பகுதியில் சுகாதார மேம்பட உரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன், அந்த இரயில்வே நிலையத்தைப் பயன்படுத்தும் பயணிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு, அக்கடிதத்தில் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. கூறியுள்ளார். மேலும், இக்கடிதத்தின் நகலை சென்னையிலுள்ள தென்னக இரயில்வே பொது மேலாளர் அவர்களுக்கும் அனுப்பியுள்ளார்.



கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தலின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தரம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலின்படி மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் BLA2 பாக ஆலோசனைக் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பொன் சிவகுமார், மாவட்ட கவுன்சிலர் பி. ராஜாராமகிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் டி.குமார், மாவட்ட பிரதிநிதிகள் வி. தனபால், பத்மா, சொல்வராஜ் ஆலோசனை வழங்கினர். உடன் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வரவேற்பு : டி.ராமகிருஷ்ணன்! தலைமை: மிசா.பா.மதிவாணன்! மாதவரம் 28வது வட்டத்தில்

# கலைஞர் 101வது பிறந்த நாள் நினைவு கொடிக் கம்பம் - கல்வெட்டு திறப்பு விழா!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் கொடியேற்றுகிறார்! எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் - எம்.பிரேம்குமார் - டி.ஆர்.ரவீந்திரகுமார் பங்கேற்பு!

சென்னை, நவ. 15 -

மாதவரம் தெற்கு பகுதி 28 வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நினைவு கொடிக் கம்பம் - கல்வெட்டு திறப்பு விழா (இரண்டு இடங்களில்) இன்று (15.11.2024 வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் கொல் கட்டா நகர் - அம்பேத்கர் நகர், டி.எச்.ரோடு, மூலக்கடை ஆகிய இடங்களில் கழக கொடிக் கம்பத்தில் கொடியேற்று விழா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் - தியாக தீபம் மா.பொ. வேதா நினைவு மன்ற செயலாளர் டி.ராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார்.

மாதவரம் பகுதி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றத் தலைவர் டி. ஆர்.ரவீந்திர குமார், டி. ஆர். செங்குட்டுவன், மா.பொ.வே.ராஜா, எஸ். சேகர், ஜெயந்தி மதிவாணன், எஸ்.கனிமொழி சுரேஷ் எம்.சி., எஸ்.பார்கவி, ஏ.சுஜாதா, எம்.பி.நடராஜன், ஏ.செல்வம், மதி இளங்கோ, எஸ்.கரண்ராஜ், எஸ்.நிசார் அகமத், எஸ்.ஆரோக்கியராஜ், எஸ். வினோத், இ.ஜோஸ்வா எஸ்.சிவசங்கரன், பி.காசிராஜன், ஜி.கடற்கரையாண்டி, டி.ஆசைத்தம்பி, சி.தயாநிதி, ஏ.அர்ஜுனன், தாவூத், பூக்கடை ரவி, ஜி. அருள், பி.கோபால், எஸ். விக்னேஸ்வரன், ஐ.இளங்கோவன், டி.ராஜேஷ் குமார், என்.சுபாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா பா.மதிவாணன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சி.எம்.டி.ஏ. உறுப்பினர் தமிழ்நாடு நூலகப்பிரிவு தலைவருமான மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கழகக் கொடி ஏற்றி வைத்து சிறப்பிக்கிறார்.

மாதவரம் 3வது மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால் கல்வெட்டினை திறந்து வைக்கிறார்.

மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், 28 வது வட்டக் கழக செயலாளர் எம்.பிரேம்குமார் ஆகியோர் இனிப்பு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் புத்தகரம் இ.ஏழுமலை எம்.சி., வி. எஸ்.ஆர்.ஜெயக்குமார், ஏ. விஜயலட்சுமி, இ. மோகன், சி.கே.கோபால், வட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.எம். பன்னீர் செல்வம் ஏ.சசிகுமார் எஸ்.எம். மோகன் ஏ.முனுசாமி சி.கே. ஜி.தர்மராஜ் கே.பி.உசேந்திரன் ஏ.ஜெய ச்செல்வி யு. காந்திமதி உதயசூரியன், டி.மதன் டி.ராமன் டி. வேணு கே.எஸ்.ரவி எஸ். ஆர்.பிரசாத் கே.அசோக் குமார் எஸ்.ராஜன் கிச்சா (எ) கிருஷ்ணன், ஜி.முனுசாமி ஏ. அன்பரசன் என். குமார் எம்.மதி ஜெ.நெப்போலியன் சிவமாறன் ஏ.சிக்கந்தர் கலீல் ரகுமான் எம்.மகேந்திரன் டி.ஜெயபால் இ.எக்சோன் எஸ். ராஜேந்திரன் சக்திவேல் தாமரை முனுசாமி ஏ.சுப்பிரமணி செல்வ ரவி, என். செழியன் டி.அன்பழகன் மீசை சேகர் என்.சுகுமார் ஏ.முரளி டி.ஆர்.ரவிக்குமார் டி.சி.சுரேஷ் மா.போ.வே. சங்கர் மா.பொ.வே அழகிரி கே.மோகன் சா.ஏழுமலை டி.ஆனந்தன் எம்.ராஜேஷ் எஸ்.சுரேஷ் கே.மாறன் ஜெ.ககாரின் ஜி.ராஜ்குமார் ஏ.சுதாகர் கே.ரமேஷ் ஆர். சுகுமார் எம்.சுதாகர் கே. மதன் ஜெ.ரவி ஜி.பாபு விக்கிரமாதித்யன் ஏ.சரவணன் எஸ்.எம்.பி.சந்துரு எம்.நாகராஜ் எஸ்.சந்துரு மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அச்சரப்பாக்கம் ஆர். எஸ். சிவராஜ் ஏற்பாட்டில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்: இனிப்பு - உணவு வழங்கல்!

## பா.அப்துல் மாலிக் - கே. கண்ணன் - டி.வி.கோகுலகண்ணன் பங்கேற்பு!

சென்னை, நவ. 15 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அச்சரப்பாக்கம் ஆர். எஸ். சிவராஜ் ஏற்பாட்டில் மூன்று நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. 3 -11 - 2024 அன்று நிகழ்ச்சி தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து 10 -11- 2024 அன்று இளைஞரணி மாநில துணைச் செயலாளர் பா. அப்துல் மாலிக் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 1) பட் சீனியர் சிட்டிசன் ஹோம் பெரிம்பியர் கண்டிகை ( முதியோர் இல்லம்)

2. மாரியம்மா ஸ்பெஷல் ஸ்கூல் உத்தமநல்லூர் (மாற்றுத்திறனாளிகள் இல்லம்) 3. செவன் ஸ்டார்+ குழந்தைகள் காப்பகம் இல்லம்) ஆகிய மூன்று இடங்களிலும் இவர்களுக்கு மதிய உணவாக அறுசுவை உணவும் மற்றும் இரண்டு இடங்களில் கேக் வெட்டி பிரியாணி வழங்கியும் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. கண்ணன், ஒன்றிய பெருந்தலைவர் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் டி.வி. கோகுலகண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ். உசேன், முன்னாள் அவைத் தலைவர் என்.வீரராகவன், பேரூராட்சி அவைத் தலைவர் ஏ .சையது முகமது, ஊராட்சி மன்ற தலைவர் ஆர். சங்கர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ். ஜியாவுதீன், மாவட்ட பிரதிநிதிகள் ஜெ. பார்த்தசாரதி, டி. கருணாகரன், மாவட்ட அகில அணியின் துணை அமைப்பாளர்கள் எஸ். விஸ்வநாதன், கே. முத்து, வர்த்தக அணி மாவட்ட து. சுரேஷ், ஆதிதிராவிடர் அணி ஒன்றிய அமைப்பாளர் டி. லட்சுமணன், பேரூராட்சி துணை செயலாளர் பி. ஆனந்தன், பொன் கே. ராமன், ஏ.ஜெயக்குமார், கே. பிரகாஷ், வழக்கறிஞர் ரா. வெற்றிசசிகுமார், பாண்டியன், கே. லோகநாதன், வி. செந்தில்குமார், துரை கணேஷ், எஸ். வரதராஜன், ஜெகநாதன், சிவனேசன், பத்மநாபன், வி. கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அச்சரப்பாக்கம் ஆர். எஸ். சிவராஜ் ஏற்பாட்டில் மாரியம்மா ஸ்பெஷல் ஸ்கூல் உத்தமநல்லூர் ஆதரவற்றோர் இல்லத்தில் கேக் வெட்டி – உணவு வழங்கப்பட்டது. இதில் இளைஞரணி மாநில துணைச் செயலாளர் பா. அப்துல் மாலிக், அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் டி.வி. கோகுலகண்ணன், எஸ். உசேன், என்.வீரராகவன், ஏ.சையது முகமது, ஆர். சங்கர், எஸ். ஜியாவுதீன், ஜெ. பார்த்தசாரதி, டி.கருணாகரன், எஸ்.விஸ்வநாதன், கே. முத்து, து.சுரேஷ், டி. லட்சுமணன், பி.ஆனந்தன், கே.ராமன், ஏ.ஜெயக்குமார், கே. பிரகாஷ், ரா. வெற்றிசசிகுமார், பாண்டியன், கே. லோகநாதன், வி. செந்தில்குமார், துரை கணேஷ், எஸ். வரதராஜன், ஜெகநாதன், சிவனேசன், பத்மநாபன், வி. கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண் பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் , 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6,மற்றும் 6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்க வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 அல்லது12 ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க , கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி [ 16.11.2024, 17.11.2024], சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, மற்றும் [ 23.11.2024, 24.11.2024] , சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நடக்க உள்ள வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம்களில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள், பாகமுகவர்கள் [ BLA2] மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் அவரவர் பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் 01.01.2025 அன்று 18 வயது நிறைவடைபவர்களை புதிய வாக்காளர்களாக பதிவு செய்தல், அந்தந்த பூத்களில் தகுதியற்ற வாக்காளர்களை நீக்குதல், தகுதியான வாக்காளர்களை சேர்த்தல் போன்ற வாக்காளர் திருத்தப் பட்டியல் பணியிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.